முழுப் பதிப்புரிமையுடையது

SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

மட்டம் III பரீட்சை – 2026 சனவரி

(301) நிதி அறிக்கையிடல்

(Financial Reporting)

2025-02-07
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம்*** : *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  விடையெழுத : 03 மணித்தியாலங்கள்
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  (5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (7) *100 புள்ளிகள்.*

<u>பகுதி A</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா 01

பொது நோக்க நிதி அறிக்கையிடலின் முதன்மை நோக்கம், ஓர் அறிக்கையிடல் உரிமம் பற்றிய நிதித் தகவல்களை வழங்குவதாகும். இது ஏற்கனவேயுள்ள மற்றும் சாத்தியமான முதலீட்டாளர்கள், கடன் வழங்குநர்கள், மற்றும் பிற கடன்கொடுத்தோர் ஆகியோருக்கு உரிமத்திற்கு வளங்களை வழங்குவது தொடர்பான தீர்மானங்களை எடுப்பதில் பயனுள்ளதாக அமைகிறது.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) பொது நோக்க நிதி அறிக்கையிடலில் இருந்து தகவல்களைப் பயன்படுத்தி நாட்டதாரர்கள் எடுக்கக்கூடிய மூன்று (03) பொருளாதாரத் தீர்மானங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) "நிதி மூலதனப் பராமரிப்பு" என்ற எண்ணக்கருவை **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

வினா 02

ஒருங்கிணைந்த அறிக்கையிடல் என்பது நிதி மற்றும் நிதி சாராத தகவல்களை ஒரே அறிக்கையில் இணைத்து, ஒரு கம்பனி காலப்போக்கில் எவ்வாறு மதிப்பை உருவாக்குகிறது என்பதைக் காட்டும் ஒரு செயன்முறை ஆகும்.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) "ஒருங்கிணைந்த அறிக்கை" என்னும் பதத்தை **வரையறுக்க.** (03 புள்ளிகள்)

(b) ஒருங்கிணைந்த அறிக்கையில் உள்ள "இடர் மற்றும் வாய்ப்புகள்" இன் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய இரண்டு (02) பிரதான பகுதிகளைக் (key areas) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

வினா 03

நிதிச் செயற்றிறன் பகுப்பாய்வு என்பது ஒரு கம்பனியின் நிதிசார் ஸ்திரத்தன்மை மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை மதிப்பிடுவதற்கு நிதிக் கூற்றுக்களை ஆய்வு செய்து, விளக்குவதை உள்ளடக்கியதாகும். இந்தச் செயன்முறையில், பிரதான அளவீடுகளை மதிப்பிடுவதிலும் போக்குகளை அடையாளங் காண்பதிலும் நிதி விகிதங்கள் முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றன.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) இரண்டு (02) இலாபத்தன்மை விகிதங்களையும் ஒரு (01) திரவத்தன்மை (liquidity) விகிதத்தையும் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) விகிதப் பகுப்பாய்வின் இரண்டு (02) வரையறைகளைக் (limitations) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

வினா 04

(a) LKAS 1- நிதிக் கூற்றுக்களின் முன்வைப்பு – முந்தைய காலப்பகுதிகளுக்குரிய உரிமத்தின் நிதிக் கூற்றுக்களை பிற உரிமங்களின் நிதிக் கூற்றுக்களுடன் ஒப்பீடு செய்வதை உறுதி செய்வதற்காக பொது நோக்க நிதிக் கூற்றுக்களை முன்வைக்கின்ற அடிப்படையைக் குறிந்துரைக்கிறது.

நீங்கள் செய்ய வேண்டியது :

பொறுப்பொன்றை நடைமுறைப் பொறுப்பாக வகைப்படுத்த பூர்த்தி செய்யப்பட வேண்டிய இரண்டு (02) தேர்வுநிபந்தனைகளைக் (criteria) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட ABC கம்பனி** 2023 ஏப்ரல் 01 இல் ரூ. 6,800,000/- இற்கு இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது. இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 4 ஆண்டுகள் ஆகும். இயந்திரம் கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்யப்படுகின்றது. 2025 மார்ச் 31 இல், கம்பனி சேதஇழப்புச் சோதனை ஒன்றை மேற்கொண்டது. அதில் சீர் மதிப்பு கழித்த விற்பனைக் கிரயம் மற்றும் இயந்திரத்தின் பயன்பாட்டுப் பெறுமதி ஆகியன முறையே ரூ. 2,600,000/- ஆகவும் ரூ. 3,000,000/- ஆகவும் வெளிப்பட்டன.

நீங்கள் செய்ய வேண்டியது :

LKAS 36 – சொத்துக்களின் சேத இழப்பு நியமத்தின்படி, இயந்திரத்தின் சேத இழப்பு நட்டத்தைக் (impairment loss) **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

பகுதி A முடிவு

பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

வினா 05

(a) கீழ்வரும் தகவல்கள் 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட சுவீட்ஸ் கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) **வரையறுக்கப்பட்ட சுவீட்ஸ் கம்பனி** ஏற்கனவே விருத்தி செய்யப்பட்ட மொபைல் செயலி (mobile app) ஒன்றை மற்றுமொரு தொழினுட்பக் கம்பனியிடமிருந்து ரூ. 4 மில்லியனுக்குக் கொள்வனவு செய்தது. இந்தச் செயலி வாடிக்கையாளர்கள் கேக் ஓடர்களை நேரடியாக மேற்கொள்ள அனுமதிக்கிறது.

(2) கம்பனி **"வரையறுக்கப்பட்ட சுவீட் கம்பனியை"** ஒரு வணிகச் சின்னமாக (trade mark) பதிவு செய்ய ரூ. 500,000/- ஐச் செலவிட்டது.

நீங்கள் செய்ய வேண்டியது :

மேற்படி ஒவ்வொரு செலவும் LKAS 38 – அருவச் சொத்துக்கள் நியமத்தின்படி, அருவச் சொத்துக்களாக ஏற்பிசைவு செய்யப்பட முடியுமா என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட ஸ்டார் கம்பனி** புதிய கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2024 ஏப்ரல் 01 இல் ஆண்டிற்கு 10% வட்டியில் **ABC** வங்கியிடம் இருந்து ரூ. 10,000,000/- கடனைப் பெற்றுக் கொண்டது. அதே தினத்தில், கம்பனி நிர்மாணத்தை ஆரம்பித்ததுடன் இந்தக் கடன் ரூ.10,000,000/- ஐயும் ஒப்பந்ததாரரின் கொடுப்பனவுக்காகப் பயன்படுத்தியது. 2024 மே 01 இல், கம்பனி இதே நிர்மாணத்திற்கான மற்றுமொரு கடனாக ஆண்டிற்கு 12% வட்டியில் **PQR வங்கியிடமிருந்து** ரூ. 12,000,000/- இனைப் பெற்றுக் கொண்டது. இக்கடன் பயன்படுத்தப்படும் வரை, இந்தத் தொகையானது ஒரு நிலையான வைப்பில் வைப்புச் செய்யப்பட்டதுடன், முதலீட்டு வருமானமாக ரூ.720,000/- சம்பாதிக்கப்பட்டது. இந்தக் கடனின் முழுத் தொகையும் 2025 சனவரி 31 இல் ஒப்பந்ததாரரின் இறுதிக் கொடுப்பனவைத் தீர்ப்பனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டது. மொத்த நிர்மாணக் கிரயம் ரூ. 25,000,000/- ஆக உள்ளதுடன் இந்தக் கட்டடம் 2025 பெப்ரவரி 01 இல் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது. மேற்படி இரண்டு கடன்களினதும் மூலதன மீள்கொடுப்பனவுகள் 2025 ஏப்ரல் 01 இல் இருந்து ஆரம்பிக்கப்பட்டன.

நீங்கள் செய்ய வேண்டியது :

LKAS 23 – கடன்பெறுகைக் கிரயத்தின்படி, 2025 மார்ச் 31 இல் கட்டடங்கள் தொடர்பில் மூலதனமாக்கப்பட வேண்டிய கடன்பெறுகைக் கிரயத்தைக் **கணிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(மொத்தம்10 புள்ளிகள்)

வினா 06

2025 மார்ச் 31 மற்றும் 2024 மார்ச் 31 ஆகிய திகதிகளிலான **வரையறுக்கப்பட்ட எமிலி (தனியார்) கம்பனியின்** நிதி நிலைக் கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன :

வரையறுக்கப்பட்ட எமிலி (தனியார்) கம்பனி

நிதி நிலைக் கூற்றுகள் *(ரூ.'000)*

மார்ச் 31 இல்	**2025**	**2024**
நடைமுறையல்லாச் சொத்துக்கள் :		
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	138,690	136,420
திரண்ட தேய்மானம்	(127,930)	(109,730)
கொண்டுசெல்லல் பெறுமதி (carrying value)	**10,760**	**26,690**
நடைமுறைச் சொத்துகள் :		
தொக்குகள்	258,700	208,710
வியாபார மற்றும் பிற வருமதிகள்	54,730	148,760
காசும் காசுச் சமானங்களும்	269,709	161,083
	583,139	**518,553**
மொத்தச் சொத்துகள்	**593,899**	**545,243**
உரிமையாண்மையும் பரிப்புகளும் :		
உரிமையாண்மை :		
குறிப்பிடு மூலதனம்	300,000	250,000
கைக்கொள் இலாபம்	49,013	28,763
	349,013	**278,763**
நடைமுறையல்லாப் பரிப்புகள் :		
வங்கிக் கடன்கள்	90,790	127,600
ஊழியர் நன்மைகள் (பணிக்கொடைக்கான ஏற்பாடு)	20,470	19,460
	111,260	**147,060**
நடைமுறைப் பரிப்புகள் :		
வியாபார சென்மதிகள்	124,376	101,400
கடன்கள் மீது செலுத்த வேண்டிய வட்டி	5,470	13,800
செலுத்த வேண்டிய வருமான வரி	3,780	4,220
	133,626	**119,420**
மொத்த உரிமையாண்மையும் பரிப்புகளும்	**593,899**	**545,243**

பின்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரிச் செலவினம் ரூ. 3,250,000/- ஆக இருந்தது. கம்பனியின் வரி மற்றும் கடன் வட்டிக்கு முன்னரான இலாபம் ரூ. 25,500,000/- ஆக இருந்தது.

(2) 2024 செப்ரெம்பர் 30 இல் மோட்டார் வாகனமொன்று ரூ. 5.5 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டது. மோட்டார் வாகனத்தின் கிரயம் ரூ. 6 மில்லியனாக இருந்த அதே வேளை 2024 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் ரூ. 3.75 மில்லியனாக இருந்தது. மோட்டார் வாகனங்கள் 5 ஆண்டுகள் ஈறாக கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்யப்படுகின்றன. விற்பனை செய்யப்பட்ட வாகனத்திற்கு மாற்றாக, புதிய வாகனம் 2024 அக்டோபர் 01 இல் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது அத்திகதியிலேயே மூலதனமாக்கப்பட்டது.

(3) ஆண்டிற்கான கடன்கள் மீதான வட்டிச் செலவினம் ரூ. 2,000,000/- ஆக இருந்ததுடன் ஆண்டின் காலப்பகுதியில் ஒரு புதிய கடன் ரூ. 7,500,000/- பெற்றுக் கொள்ளப்பட்டது.

(4) ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூ. 1,100,000/- ஆக இருந்தது.

(5) ஆண்டின் காலப்பகுதியில், கம்பனி அதன் ஏற்கனவேயுள்ள பங்குதாரர்களுக்கு புதிய பங்குகளை வழங்கியது.

நீங்கள் செய்ய வேண்டியது :

நேரில் முறையைப் பயன்படுத்தி, 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட எமிலி (தனியார்) கம்பனியின்** காசுப் பாய்வுகள் கூற்றைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

வினா 07

(a) பின்வரும் தகவல்கள் 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட டேஸ்ரி கம்பனி** தொடர்பில் வழங்கப்பட்டதாகும். மேலும் இவை 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கவனத்திற் கொள்ளப்படவில்லை :

(1) 2025 மார்ச் 30 இல் கம்பனியின் வாடிக்கையாளர்களில் ஒருவர் உணவு நஞ்சாகியதால் ஏற்பட்ட ஒவ்வாமைக்கு ரூ. 2 மில்லியன் இழப்பீடு கோரி கம்பனிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளார். நிதிக் கூற்றுக்கள் அதிகாரம் அளிக்கப்படும் திகதி வரை உள்ள சான்றுகளின் அடிப்படையில், கம்பனியின் சட்ட ஆலோசகர்கள் கம்பனி அதற்குப் பொறுப்பேற்பதற்கான சாத்தியக்கூறு இல்லை என ஆலோசனை வழங்கியுள்ளனர்.

(2) வரி மதிப்பாண்டு 2023/24 தொடர்பில் ரூ. 1.5 மில்லியன் செலவினங்களை அனுமதியாது, வருமான வரி தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. பல பதில்களும் சான்றுகளும் அனுப்பப்பட்ட பின்னர், 2025 ஏப்ரல் 30 இல் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் அனுமதியாத செலவினமாக ரூ. 500,000/- இறுதி செய்யப்பட்டது.

(3) தவறான நடத்தை காரணமாக ஊழியர் ஒருவரின் சேவை முடிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அந்த முன்னாள் ஊழியர் இழப்பீடாக ரூ. 1 மில்லியன் கோரி, கம்பனிக்கு எதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார். சான்றுகளின் அடிப்படையில், கம்பனி இந்த இழப்பீட்டைச் செலுத்த அதிக சாத்தியக்கூறு காணப்படுவதாக கம்பனியின் வழக்கறிஞர்கள் நம்புகின்றனர். இறுதியாக, 2025 மே 15 இல் இழப்பீடாக ரூ. 800,000/- செலுத்துமாறு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தது.

நிதிக் கூற்றுக்கள் 2025 மே 30 இல் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகக் கருதுக.

நீங்கள் செய்ய வேண்டியது :

LKAS 37 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்க சொத்துகள் நியமத்தின்படி, 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட டேஸ்ரி கம்பனியின்** நிதிக் கூற்றுக்களில் மேற்படி ஒவ்வொரு நிகழ்வும் எவ்வாறு ஏற்பிசைவு செய்யப்பட முடியுமென **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட அல்டிமா கம்பனி** 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் வரைவு நிதிக் கூற்றுக்களை இறுதி செய்துள்ளது.

பின்வரும் மீதிகள் 2024 ஏப்ரல் 01 இல் **வரையறுக்கப்பட்ட அல்டிமா கம்பனியின்** ஏடுகளில் காணப்பட்டன:

	ரூபா
இயந்திரக் கணக்கு	8,000,000
திரண்ட தேய்மானம் - இயந்திரம்	3,000,000

இயந்திரக் கொள்வனவின்போது, இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாக இருக்கும் என மதிப்பிடப்பட்டது. எவ்வாறாயினும், 2024 ஏப்ரல் 01 இல் இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் குறித்து மேற்கொள்ளப்பட்ட மீளாய்வைத் தொடர்ந்து, 2024 ஏப்ரல் 01 இல் இயந்திரத்தின் எஞ்சிய பயன்தரும் ஆயுட்காலம் 4 ஆண்டுகள் என வெளிப்படுத்தப்பட்டது. **வரையறுக்கப்பட்ட அல்டிமா கம்பனி** அதன் இயந்திரங்களை கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்கிறது.

நீங்கள் செய்ய வேண்டியது :

LKAS 08 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் என்ற நியமத்தின்படி, 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட அல்டிமா கம்பனியின்** இயந்திரத்தினது தேய்மானக் கட்டணத்தைக் **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி B முடிவு

பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

வினா 08

பின்வரும் பரீட்சை மீதி 2025 மார்ச் 31 இலான **அல்ரா பீ.எல்.சீ.** இன் கணக்கேடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டது :

அல்ரா பீ.எல்.சீ.

2025 மார்ச் 31 இலான பரீட்சை மீதி *(ரூ.'000)*

	வரவு	செலவு
குறிப்பிடு மூலதனம் (100,000,000 சாதாரண பங்குகள்)		100,000
கைக்கொள் இலாபம் - 2024 ஏப்ரல் 01 இல்		31,500
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்		3,000
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் :		
காணி – மீள்மதிப்பீட்டுத் தொகையில்	58,000	
கட்டடங்கள்	36,000	
மோட்டார் வாகனங்கள்	18,000	
2024 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் :		
கட்டடங்கள்		16,000
மோட்டார் வாகனங்கள்		9,000
செலுத்திய குத்தகை வாடகை	4,276	
2025 மார்ச் 31 இல் தொக்கு – கிரயத்தில்	43,000	
வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள்	41,000	45,819
கையிலும் வங்கியிலும் உள்ள காசு	56,300	
2024 ஏப்ரல் 01 இல் வியாபார வருமதிகளுக்கான விடுதொகை		4,200
செலுத்திய வருமான வரி	16,500	
விற்பனைக் கிரயம் / விற்பனைகள்	285,200	459,955
முற்கொடுப்பனவுகள்	2,400	
2024 ஏப்ரல் 01 இல் செலுத்த வேண்டிய வருமான வரி		6,100
நிருவாகச் செலவினங்கள்	61,298	
விநியோகச் செலவினங்கள்	42,100	
நிதிச் செலவினங்கள்	11,500	
	675,574	**675,574**

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 1,000 அலகுகளைக் கொண்ட ரூ. 9,000,000/- கிரயமான இருப்புகள் மெதுவாக நகர்வது கண்டறியப்பட்டதுடன், அது 2025 மார்ச் 31 இலான இறுதி இருப்பு மீதியில் உள்ளடக்கப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது. இந்த இருப்பானது 2025 ஏப்ரலில் ரூ. 100,000/- போக்குவரத்துச் செலவாகச் செலவிட்டதன் பின்னர் விற்பனை விலையில் 50% தள்ளுபடி வழங்கி, விற்பனை செய்யப்பட்டது. சாதாரண விற்பனை விலையானது அலகொன்று ரூ. 10,000/- ஆகும்.

(2) 2025 மார்ச் 31 இல், கம்பனியின் மோட்டார் லொறிகளில் ஒன்று தீ விபத்தினால் முற்றாகச் சேதமடைந்தது. இந்த லொறி 2021 ஏப்ரல் 01 இல் ரூ. 6,000,000/- கிரயத்தில் வாங்கப்பட்டதாகும். 2025 ஏப்ரல் 10 இல், காப்புறுதி நிறுவனம் சேதத்தை மதிப்பீடு செய்து, ரூ. 2,500,000/- இழப்பீடு செலுத்த ஒப்புக் கொண்டது. இது தொடர்பில் கணக்கேடுகளில் எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(3) 2024 ஏப்ரல் 01 இல், கம்பனியானது நிதிக் குத்தகையின் கீழ் ஒரு மோட்டார் வாகனத்தைக் கொள்வனவு செய்தது. குத்தகை வாகனத்தின் சீர் மதிப்பு ரூ. 10,493,500/- ஆக இருந்ததுடன், குத்தகைக் காலம் 4 ஆண்டுகளாக உள்ளது. வருடாந்த குத்தகைத் தவணைப்பணம் ரூ. 2,776,000/- ஆனது ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 இல் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். உள்ளார்ந்த வட்டி வீதம் ஆண்டிற்கு 9% ஆக உள்ளது. மோட்டார் வாகனத்தின் உரிமை, குத்தகைக் கால முடிவில் **அல்ரா பீ.எல்.சீ.** இற்கு மாற்றப்படும். குத்தகையின் தொடக்கத்தில் உடனடிக் கொடுப்பனவாகச் (down payment) செலுத்தப்பட்ட ரூ. 1.5 மில்லியனும் முதலாவது தவணைப் பணமாக 2025 மார்ச் 31 இல் செலுத்தப்பட்ட ரூ. 2,776,000/- உம் “செலுத்திய குத்தகை வாடகைக்” கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர, வேறெந்தப் பதிவுகளும் இவ்விடயம் தொடர்பில் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(4) காணியானது 2021/22 நிதியாண்டு காலப்பகுதியில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. அது மீண்டும் 2025 மார்ச் 31 இல் கம்பனியால் ரூ. 60,000,000/- ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால், இது கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(5) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியன கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்யப்பட வேண்டும். ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு :

கட்டடங்கள்	:	40 ஆண்டுகள்
மோட்டார் வாகனங்கள்	:	04 ஆண்டுகள்

(6) ஆண்டின் காலப்பகுதியில், கம்பனிக்கு ரூ. 3,500,000/- தரவேண்டிய ஒரு வாடிக்கையாளர் வங்குரோத்து அடைந்தவராகப் பிரகடனப்படுத்தப்பட்டார். இதனால் அத்தொகை அறவிட முடியாததாக மாறியுள்ளதுடன், அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்புச் செய்யப்பட வேண்டியுள்ளது. கம்பனியானது கடந்த நிதியாண்டில் இந்தக் குறிப்பிட்ட வாடிக்கையாளருக்காக கணக்கேடுகளில் முழுமையான ஏற்பாட்டை ஏற்கனவே செய்திருந்தது. மேலும், 2025 மார்ச் 31 இலான எஞ்சிய வியாபார வருமதிகள் மீதியில் 10% இல் வியாபார வருமதிகளுக்கான விடுதொகையைப் பேணத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(7) 2023/2024 வரி மதிப்பாண்டிற்கான வருமான வரிப் பரிப்பு ரூ. 6,100,000/- ஆனது 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் செலுத்தப்பட்டது. செலுத்திய தொகை “செலுத்திய வருமான வரி”க் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. 2024/2025 வரி மதிப்பாண்டிற்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூ. 10,500,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(8) “முற்கொடுப்பனவுகள்” கணக்கில், 2025 முழு நாட்காட்டி ஆண்டிற்குமாகச் செலுத்தப்பட்ட வாடகைக் கொடுப்பனவு உள்ளடங்குகிறது.

(9) நிதிக் கூற்றுக்கள், வழங்கப்படுவதற்காக 2025 மே 31 இல் கம்பனியின் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

நீங்கள் செய்ய வேண்டியவை :

பிரசுரிப்பதற்குப் பொருத்தமான வடிவத்தில் **அல்ரா பீ.எல்.சீ.** இற்காக பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று). (09 புள்ளிகள்)

(b) 2025 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (08 புள்ளிகள்)

(c) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று. (03 புள்ளிகள்)

(d) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரண மாற்றங்களைக் காட்டும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள். (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

வினா 09

2025 மார்ச் 31 மற்றும் 2024 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான **SRJ PLC** இன் முற்றடக்க வருமானக் கூற்றுக்களின் பிரித்தெடுப்பும் 2025 மார்ச் 31 மற்றும் 2024 மார்ச் 31 ஆகிய திகதிகளிலான நிதி நிலைக் கூற்றுக்களின் பிரித்தெடுப்பும் கீழே தரப்பட்டுள்ளன :

SRJ PLC

வருமானக் கூற்றுக்களிலிருந்தான பிரித்தெடுப்புகள் *(ரூ.'000)*

மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுகளுக்கானது	**2025**	**2024**
விற்பனைகள்	1,921,320	1,680,400
விற்பனைக் கிரயம்	(1,500,520)	(1,476,800)
மொத்த இலாபம்	**420,800**	**203,600**
வட்டிச் செலவினம்	(18,230)	(14,200)
வருமான வரி	(11,400)	(12,500)
வரிக்குப் பின்னரான நிகர இலாபம்	**128,790**	**118,470**

SRJ PLC

நிதி நிலைக் கூற்றுக்களிலிருந்தான பிரித்தெடுப்புகள் *(ரூ.'000)*

மார்ச் 31 இல்	**2025**	**2024**
நடைமுறைச் சொத்துகள்	799,460	1,178,000
நடைமுறைப் பரிப்புகள்	116,700	124,890
தொக்கு	110,700	108,400
வியாபார வருமதிகள்	587,200	420,680
வியாபார சென்மதிகள்	116,800	112,100
வட்டி தாங்கும் கடன்கள்	46,870	54,200
பங்குதாரர்களின் உரிமையாண்மை	159,400	134,100

மொத்த விற்பனையில் 60% ஆனவை கடனடிப்படையில் விற்பனை செய்யப்பட்டதாகும். விற்பனைக் கிரயத்தில் 75% ஆனவை கொள்வனவுகளைக் கொண்டிருப்பதுடன் அதில் 90% ஆனவை கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நீங்கள் செய்ய வேண்டியவை :

2025 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டுகளுக்கான / இலான மேற்படி தகவல்களின் அடிப்படையில் **SRJ PLC** இன் பின்வரும் விகிதங்களைக் **கணிப்பிடுக** :

(a) மொத்த இலாப விகிதம்

(b) நிகர இலாப விகிதம்

(c) தொக்கு இருப்புக் காலம்

(d) கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்

(e) கடன்கொடுத்தோருக்கான தீர்ப்பனவுக் காலம். (10 புள்ளிகள்)

வினா 10

சீதேவி பீ.எல்.சீ. ஆனது 2024 ஏப்ரல் 01 இல் **தேவி பீ.எல்.சீ.** இன் 90% ஆன சாதாரண பங்குகளை ரூ. 160 மில்லியனுக்கு கொள்வனவு செய்தது.

2025 மார்ச் 31 இலான ***சீதேவி பீ.எல்.சீ.*** மற்றும் **தேவி பீ.எல்.சீ.** இன் நிதி நிலைக் கூற்றுக்கள் பின்வருமாறு :

நிதி நிலைக் கூற்றுக்கள் *(ரூ.'000)*

2025 மார்ச் 31 இல்	**சீதேவி பீ.எல்.சீ.**	**தேவி பீ.எல்.சீ.**
நடைமுறையல்லாச் சொத்துகள் :		
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கொண்டு செல்லல் பெறுமதியில்	350,000	165,000
தேவி பீ.எல்.சீ. இல் முதலீடு	160,000	-
தேவி பீ.எல்.சீ. இன் தனிச்சங்களில் முதலீடு	30,000	-
நடைமுறைச் சொத்துகள் :		
தொக்குகள்	85,000	45,000
வியாபார வருமதிகள்	60,000	34,200
காசும் காசுச் சமானங்களும்	20,700	71,000
	165,700	150,200
மொத்தச் சொத்துகள்	**705,700**	**315,200**
உரிமையாண்மை :		
குறிப்பிடு மூலதனம்	400,000	150,000
கைக்கொள் இலாபம்	210,000	37,000
மொத்த உரிமையாண்மை	**610,000**	**187,000**
நடைமுறையல்லாப் பரிப்புகள் :		
தனிச்சங்கள்	-	100,000
நடைமுறைப் பரிப்புகள் :		
வியாபார சென்மதிகள்	93,700	25,200
பிற சென்மதிகள்	2,000	3,000
	95,700	28,200
மொத்த உரிமையாண்மையும் பரிப்புகளும்	**705,700**	**315,200**

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) கொள்வனவுத் திகதியில், **தேவி பீ.எல்.சீ.** இன் காணி தவிர்ந்த நிகரச் சொத்துகளின் புத்தகப் பெறுமதியானது சீர் மதிப்பில் பிரதிபலித்தது. காணியின் சீர் மதிப்பு ரூ. 53 மில்லியனாக இருந்ததுடன் புத்தகப் பெறுமதி ரூ. 45 மில்லியனாக இருந்தது. கொள்வனவுத் திகதியில், கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் (NCI) சீர் மதிப்பு ரூ. 35 மில்லியனாக இருந்ததுடன் **தேவி பீ.எல்.சீ.** இன் 2024 ஏப்ரல் 01 இலான கைக்கொள் இலாபம் ரூ. 25,000,000/- ஆகக் காணப்பட்டது.

(2) ஆண்டின் காலப்பகுதியில், **தேவி பீ.எல்.சீ.** ஆனது ரூ. 30,000,000/- பெறுமதியான பொருள்களை **சீதேவி பீ.எல்.சீ.** இற்கு விற்பனை செய்தது. **தேவி பீ.எல்.சீ.** இன் விற்பனைக் கொள்கையானது கிரயத்தில் 20% இலாபத்தைப் பேணுவதாகும். 2025 மார்ச் 31 இல், **சீதேவி பீ.எல்.சீ.** இன் இறுதி இருப்பானது **தேவி பீ.எல்.சீ.** இடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 6,000,000/- பெறுமதியான பொருள்களை உள்ளடக்கியுள்ளது. **தேவி பீ.எல்.சீ.** இன் வியாபார வருமதிகள் மற்றும் **சீதேவி பீ.எல்.சீ.** இன் வியாபார சென்மதிகளில் முறையே **சீதேவி பீ.எல்.சீ.** இடமிருந்தான நிலுவையும் **தேவி பீ.எல்.சீ.** இற்கான நிலுவையுமான ரூ. 20,000,000/- உள்ளடங்குகிறது.

(3) 2024 ஏப்ரல் 01 இல், **சீதேவி பீ.எல்.சீ.** ஆனது **தேவி பீ.எல்.சீ.** இற்கு ரூ. 7,500,000/- விலைக்கு மோட்டார் லொறி ஒன்றை விற்பனை செய்தது. அந்தத் திகதியில் **சீதேவி பீ.எல்.சீ.** இன் ஏடுகளில் லொறியானது ரூ. 6,000,000/- கொண்டுசெல்லல் பெறுமதியைக் (carrying value) கொண்டிருந்தது. 2024 ஏப்ரல் 01 இல் மோட்டார் லொறியின் எஞ்சிய பயன்தரும் ஆயுட்காலம் 05 ஆண்டுகளாக இருந்தது.

(4) ஆண்டின் காலப்பகுதியில், **சீதேவி பீ.எல்.சீ.** ஆனது **தேவி பீ.எல்.சீ.** இன் தனிச்சங்களில் முதலீடு செய்தது.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) **தேவி பீ.எல்.சீ.** இன் கொள்வனவினால் எழுகின்ற நன்மதிப்பைக் **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(b) 2025 மார்ச் 31 இல் ஒன்றிணைந்த நிதி நிலைக் கூற்றைத் **தயாரிக்குக.** (11 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

பகுதி C முடிவு

செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
அறிவு (1)	விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல்	**வரைக (Draw)**	வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல்
		தொடர்புபடுத்துக (Relate)	தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல்
		கூறுக/ குறிப்பிடுக(State)	திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல்
		அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)	கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல்
		நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)	தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
முற்றடக்கம் (2)	யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும்	**ஏற்பிசைவு செய்க (Recognize)**	அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல்
		பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)	விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல்
		விளக்குக (Describe)	பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும்
		விபரிக்குக (Explain)	உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல்
		பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)	சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
பிரயோகம் (3)	புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும்	**கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)**	வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல்
		வரைக (Graph)	வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல்
		மதிப்பிடுக (Assess)	பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல்
		தீர்க்குக (Solve)	கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல்
		தயாரிக்குக (Prepare)	குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல்
		எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)	உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல்
		கணிக்குக / கணிப்பிடுக (Calculate)	கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல்
		பிரயோகிக்குக (Apply)	நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
பகுப்பாய்வு (4)	யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும்	**தொடர்பாடுக(Communicate)**	தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல்
		சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)	முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல்
		வேறுபடுத்துக (Contrast)	வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல்
		ஒப்பிடுக (Compare)	ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல்
		கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)	விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல்
		வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)	சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல்
		பகுப்பாய்வு செய்க (Analyze)	தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல்